செ.வெ.எண்: 162 நாள்: 09.03.2021

**சட்டமன்றத் தேர்தல் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட விரும்பும் முன்னாள் படைவீரர்கள் வரவேற்கப்படுகின்றனர்.**

**மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

சட்டமன்றத் தேர்தல் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட விரும்பும் முன்னாள் படைவீரர்கள் வரவேற்கப்படுகின்றனர். இதுகுறித்து புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

ஏப்ரல் 2021ல் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட விரும்பும் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த திடகாத்திரமான முன்னாள் படைவீரர்கள் அனைத்து நாட்களிலும் புதுக்கோட்டை மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தில் தங்களது அடையாள அட்டை வாக்காளர் அடையாள அட்டை மற்றும் படைப்பணிச் சான்றுடன் தங்களது விருப்பத்தினை (படிவத்தில் பூர்த்தி செய்து) நேரில் வருகை தந்து பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**